**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 198 of 2020** |
| Deposition of witness | : | **PW1** |
| Name | : | **கருப்பசாமி** |
| Father Name | : | **பெரியசாமி** |
| Age | : | **35** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.09.2025.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

8. 1996ல் பாக பிரிவினை செய்யப்பட்டபோது அனைத்து பாகஸ்தர்களும் சென்று வர 24 லிங்க்ஸ் தடம் ஒதுக்கப்பட்டது என்றால் 24 லிங்க்ஸ் மற்றும் 20 லிங்க்ஸ் தடம் ஒதுக்கப்பட்டது. மேற்படி தடங்கள் எந்த எந்த திசையில் உள்ளது என்றால் எனது பூமிக்கு கிழபுரம் தென்வடல் தடம் 24 லிங்க்ஸ் அளவிலும் கிழமேல் தடம் 20 லிங்க்ஸ் அளவிலும் உள்ளது, மேலும் பத்திரத்தில் ஏற்கனவே உள்ள கிழமேல் தடத்தையும் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் கண்டு எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ளதாக கூறப்படும் கிழமேல் தடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அதன் அடி நிலம் பாத்தியம் எங்களுக்கும், அதில் நடைபாத்தியம் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் எனது பூமியில் கிழபுரம் உள்ள தென் வடல் மற்றும் கிழமேல் தடம் அடிநில பாத்தியம் எனக்கும் பிரதிவாதிக்கும், எனது பெரியப்பா பழனிச்சாமிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி ஏற்கனவே உள்ள கிழமேல் தடம் எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் தவிர வேறு யாருக்கு பாத்தியம் என்றால் எனது பெரியப்பா விற்பனை செய்த நபர்கள் அனைவருக்கும் அதில் பாத்தியம் உள்ளது.

9. எனது பெரியப்பா அவரது பாகத்தினை இந்த வழக்கிற்கு முன்னதாகவே மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மேலே குறிப்பிட்டுள்ள ஏற்கனவே உள்ள கிழமேல் தடம் எத்தனை லிங்க்ஸ் அளவு கொண்டது என்றால் அதன் அளவு தெரியவில்லை. அவ்வாறு ஏற்கனவே உள்ள கிழமேல் தடம் பற்றி பாகப்பிரிவினை ஆவணத்தில் எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல, அதன் பொதுசாராவில் மற்றும் பிரதிவாதியின் சொத்து விவரத்திலும் கண்டுள்ளது.

10. எனது சொத்தில் காங்கேயம் ரோட்டில் இருந்து வடமேற்கு மூலையில் உள்ள இடத்தை பழனியம்மாள் என்பவருக்கு விற்றுள்ளேன் என்றால் சரிதான். காங்கேயம் ரோடு ஆனது வடமேற்கே இருந்து தென்கிழக்காக செல்லும் சாலை என்றால் தவறு, தென் வடலாக தான் உள்ளது. காங்கேயம் சாலை தென் வடலாக உள்ளது என்று காட்ட எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது அரசு நிலம் என்பதால் அதற்கு தனியாக எந்த ஒரு ஆவணமும் தேவையில்லை.

11. நான் பழனியம்மாளுக்கு விற்ற இடத்தின் செக் பந்தி சொல்ல இயலுமா என்றால் இயலும். பழனியம்மாள் வீட்டிற்கு வடக்கு, ஏற்கனவே உள்ள கிழமேல் தடத்திற்கு தெற்கு, எனக்கு பாத்தியப்பட்ட கிணற்றுக்கும் கிழக்கு, தென் வடல் காங்கேயம் ரோட்டிற்கு மேற்கு. ஆணையர் அறிக்கையில் கிழமேல் ரோட்டை ஆக்கிரமித்து கட்டி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தைதான் தாவா சொத்து விவரமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, எனக்கு எழுதி வைக்கப்பட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தை தான்

தாவாவில் குறிப்பிட்டுள்ளேன். ஏற்கனவே பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் போக அதன் பின்னிட்டு எனது தந்தை சுயமாக சம்பாதித்த சொத்துக்களையும் விடுதலை ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதும் தாவா சொத்து விவரத்தில் உள்ளடங்கியுள்ளதா என்றால் ஆமாம்.

12. நான் நில அளவையரிடம் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனைக்கு உரிய சொத்துக்களை மட்டும் அளந்தால் போதும் என்று கூறிவிட்டேன் என்றால் சரிதான். பழனியம்மாளுக்கு விற்ற சொத்துக்களை பொறுத்து நான் எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்படாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பொறுத்தவரையில் தெளிவான தட விவரங்கள் மற்றும் சொத்து விவரங்கள் குறிப்பிடாத காரணத்தினால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல, நான் விளம்புகை பரிகாரமும் கோரி உள்ளேன். தாவாவில் உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2025.09.12 18:35:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.